செ.வெ.எண்: 741/2016 நாள்: 20.10.2016

# பத்திரிகை செய்தி

**கன்னியாகுமரி மாவட்டத்தில் வருவாய்த்துறையில் காலியாக உள்ள இரவுக்காவலர் பணியிடம் நிரப்ப விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான், இ.ஆ.ப., தகவல்**

**<<<O>>>**

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள வருவாய்த்துறையில் காலியாக உள்ள **1 (ஒன்று) இரவுக்காவலர் பணியிடம் நேரடி நியமனம் மூலம் நிரப்பப்பட உள்ளது. இந்த பணியிடம் ஆதி திராவிடர் (முன்னுரிமை பெற்றவர்)** ஒதுக்கீடு செய்யப்பட்டு கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த அடைகுறிக்குள் கொடுக்கப்பட்டுள்ள இன சுழற்சியினை சார்ந்த நபர்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

இந்த பதவிக்கு விண்ணப்பிக்க குறைந்தபட்சம் தமிழில் எழுதப்படிக்க தெரிந்தவராக இருத்தல் வேண்டும். 01.01.2016 அன்று குறைந்தபட்ச வயது 18 ஆகவும் அதிகபட்ச வயது வரம்பு என்பது 35 ஆகும். முன்னுரிமை பெற்றவர்களுக்கு அரசு விதிகளின்படி வயது வரம்பு தளர்வு வழங்கப்படும்.

விண்ணப்ப படிவங்கள் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலோ, www.kanyakumari.nic.in இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் உரிய ஆவணங்களுடன் நேரில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 24.10.2016 முதல் 02.11.2016 அன்று மாலை 05:45 வரை பெறப்படும் என்ற விபரம் தெரிவிக்கப்படுகிறது.

ஒம்/- சஜ்ஜன்சிங் ரா. சவான்,
மாவட்ட ஆட்சித்தலைவர்,
கன்னியாகுமரி மாவட்டம்.

உண்மை நகல்/ உத்தரவுப்படி

உசூர் மேலாளர் (பொது).

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.